ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

महेशत्वं प्राप्यां सुकृतनिचयैश्शङ्करगुरु-
प्रराजत्पादाम्भोरुहयुगळसेवां घटयसि ।
कदाचिद्बुद्धिं सत्पथचरकृतास्थां वितनुषे
यथेदं साफल्यं व्रजति सकलं द्राक्कुरु तथा ॥ १५ ॥

𑌮𑌹𑍇𑌶𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌾𑌂 𑌸𑍁𑌕𑍃𑌤𑌨𑌿𑌚𑌯𑍈𑌶𑍍𑌶𑌙𑍍𑌕𑌰𑌗𑍁𑌰𑍁-
𑌪𑍍𑌰𑌰𑌾𑌜𑌤𑍍𑌪𑌾𑌦𑌾𑌮𑍍𑌭𑍋𑌰𑍁𑌹𑌯𑍁𑌗𑌳𑌸𑍇𑌵𑌾𑌂 𑌘𑌟𑌯𑌸𑌿 ।
𑌕𑌦𑌾𑌚𑌿𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌸𑌤𑍍𑌪𑌥𑌚𑌰𑌕𑍃𑌤𑌾𑌸𑍍𑌥𑌾𑌂 𑌵𑌿𑌤𑌨𑍁𑌷𑍇
𑌯𑌥𑍇𑌦𑌂 𑌸𑌾𑌫𑌲𑍍𑌯𑌂 𑌵𑍍𑌰𑌜𑌤𑌿 𑌸𑌕𑌲𑌂 𑌦𑍍𑌰𑌾𑌕𑍍𑌕𑍁𑌰𑍁 𑌤𑌥𑌾 ।

ஹே மஹேச! ஸகல ஜகத்திற்கும் ஈசனாய் விளங்கும் ஹே சந்திரசேகர முன்ஜன்மங்களில் செய்யப்பட்ட புண்ய பரம்பரைகளால் அடையத்தகுந்த ஸ்ரீ லோககுருவான சங்கரபகவத்பாதாசார்யாளுடைய சரணகமலங்களுடைய ஸேவையை அடையும்படி நீர் செய்கிறீர். பின்னும் சாஸ்திரங்களில் கூறப்பட்ட சிறந்த தர்மானுஷ்டானங்களைச்செய்ய வேண்டுமென்று சில ஸமயங்களில் சிந்திக்கும் புத்தியையும் கொடுத்திருக்கிறீர். இவ்விதம் செய்ததால் மாத்திரம் உபயோகமில்லை. பின்னை இவைகள் எங்ஙனம் சீக்கிரம் ஸாபல்யத்தையடையுமோ, அவ்விதம் செய்யவேண்டியது உமது கடமையேயாகும்.

மானிடஜன்மாவைப் பெற்றவர்களுக்குச்சித்த சுத்தியும் ஸத்குருக்களுடைய அனுக்கிரகத்தால் உத்தமமான ஞானமேற்பட்டு ஆத்மஸ்வரூபஸாக்ஷாத்காரத்தைப் பெறுவதே முக்கியமான பலம். சித்தசுத்திக்கு முக்கியகாரணமான தர்மானுஷ்டானத்தில் விருப்பமிருக்கின்றது. தீவ்ரமான பிரவிருத்தி ஏற்படவில்லை. ஸ்ரீபரமாசார்யாளுடைய சரணஸேவை கிடைத்திருக்கிறது ஸம்ஸாரபந்த நிவர்த்திக்கு யோக்கியம். அவர்களுடைய பூர்ணானுக்கிரகத்தைப் பெறும்படியான பாக்கியம் இன்னும் நேரவில்லை. இவ்விரண்டையும் நேரும்படிசெய்து கொடுத்து அனுக்ரகிக்கவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேன். சுபம்.

உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.
விபவ-ஸு கார்த்திகை-மீ உ அவ

# வேதாந்த ஸார ஸங்கிரஹம்.

(540-வது பக்கத்தொடர்ச்சி)

சிஷ்:— ஒன்றான ஆத்மாவிற்குக் கார்யரூபத்தால் அனேக ரூப மென்பதற்கும் அநாத்மகார்யோபாதிகளாலே அனேகம் என்பதற்கும் திருஷ்டாந்தம் என்ன?

குரு:— எங்ஙனம் ஒரே பூமியானது கார்யரூபமாய் ஆனதாய்க் கொண்டு மலை, மரம், கோபுரம், சுவர், குதுர், வீடு, மடம், கடம், வாணை முதலான பேதத்தையடைகின்றதோ, அங்ங னம் மூலப்பிரகிருதி என்று சொல்லப்பட்ட, அநாத்மாவா னது ஒன்றாயிருந்தாலும் கார்ய சரீரரூபத்தால் அநேகமா கின்றது. ஆகாயம் ஒன்றாயிருந்தாலும் பூமியின் கார்யோ பாதிகளான கடம் முதலானவைகளில் பிரவேசித்ததாய்க் கொண்டு இது கடாகாயம், இது மடாகாயம் என்பது முத லான பலப்பிரகாரத்தை எவ்விதம் அடைகின்றதோ அவ்வி தம் ஆத்மா தான்ஒருவனாயிருந்தபோதிலும் அந்தந்த சரீர உபாதிகளால் ஆங்காங்கு பிரவேசித்தவன் போலிருந்து கொண்டு தேவன், முனி, மனுஷ்யன், ராமன், கிருஷ்ணன், பிராமணன், க்ஷத்திரியன், வைச்யன், சூத்திரன், பசு, பக்ஷி, பாம்பு, புழு முதலான அநேகப்பிரகாரமாகவாகிறான். இது தான் அவச்சின்னபக்ஷத்தில் திருஷ்டாந்தம். பிரதிபிம்ப பக்ஷத்திலோவென்றால் ஸமுத்திரம், ஆறு, குளம், கிணறு, கடத்தின் ஜலம் என்று ஒரே ஜலமானது எப்படிப் பலவித மாக ஆகின்றதோ, அவ்விதம் அநாத்மாவும் அனேகவித மாக ஆகின்றது. அந்த ஸமுத்திரம் முதலானவைகளில் ஒரே சூர்யனே பிரதிபிம்பிதனாயிருந்து கொண்டு எவ்விதம் அநேகரூபமாக ஆகின்றானோ அவ்விதம் ஒருவனான ஆத்மா

வும் அந்தக்காணத்தோடுகூடிய ஸகலமான சரீரங்களிலும் பிரதிபிம்பித்தனுய்க்கொண்டு அநேக ரூபமாக ஆகின்றான். இவ்விதம் இரண்டிடங்களிலும் திருஷ்டாந்தத்தை அறிந்து கொள்ளவேணும். ஜலத்தினுடைய தர்மங்களான சீதம் சலனம் முதலானவைகள் ஜலத்தில் இருக்கும் பிரதிபிம்பத்தில் மாத்திரம் எப்படிப்பிரகாசிக்கின்றனவோ பிம்பபூதனுன ஆதித்யனைத் தொடுகிறதில்லையோ அப்படியே அந்தக்காண தர்ம்மங்களான கர்த்ருத்வ போக்த்ருத்வ விகாரங்களும் அந்த அந்தக்காணத்திலிருக்கும் சிதாபாஸனிடத்தில் தான் பிரகாசிக்கின்றன. பிம்பபூதனுன ஆத்மாவிடத்தில் ஸம்பந்தப்படுகிறதில்லை. ஆகையால் ஜீவாத்மாதான் பரமாத்மா. பரமாத்மாதான் ஜீவாத்மா. எங்ஙனம் கடாகாசமே மஹாகாசம். மஹாகாசமே கடாகாசமாகின்றதோ அங்ஙனம் இங்கும் அபேதமென்றே அறியவேண்டும்.

சிஷ்:— ஜீவாத்மா கற்பிதனுகையால் அவன் அஸத்யனுகிறான். அஸத்யனுன ஜீவாத்மாவிற்கும் ஸத்யஸ்வரூபனுன பரமாத்மாவிற்கும் எப்படி அபேதம் ஸித்திக்கும்.

குரு:— ஜீவன் பாரமார்த்திகன் வ்யாவஹாரிகன் பிராதிபாஸிகன் என்று மூன்று பிரகாரமாகிறான். இந்த ஜீவர்கள்முறையே ஸுஷுப்தி, ஜாக்ரத் ஸ்வப்னம் என்கிற மூன்றுகளுக்கும் அபிமானிகளாகிறார்கள். ஜலத்தில் அலைகள் போலவும் அலையில் நுரைகள் போலும் பாரமார்த்திகஸ்வரூபத்தில் வியாவஹாரிகமும் வியாவஹாரிகத்தில் பிராதிபாஸிகமும் கற்பிக்கப்படுகின்றன. பாரமார்த்திக ஜலத்தில் அதாவது ஸத்யமான ஜலத்தில் விளங்கும் தித்திக்கும் தன்மை, சலிக்கும் தன்மை, சீதளமாயிருக்கும் தன்மை என்கிற இந்த குணங்கள் எங்ஙனம் அலையில் தோன்றி அதிலிருந்தும் நுரைகளிலும் பிரகாசிக்கின்றனவோ, அங்ஙனம் நித்யமாயும் கூடஸ்தமாயும் விளங்கும். பரமாத்மஸ்வரூபத்தில்விளங்கும் ஸத்-சித், ஆனந்தம் என்கிற இவைகள் வியாவஹாரிக ஜீவனிடத்தில் பிரகாசிக்கின்றன. அவன்முகமாக பிராதிபாஸிகஜீவனிடத்திலும் பிரகாசிக்கின்றன. எவ்விதம் அலையில்லாவிட்டால் நுரையும் ஜலமில்லாவிட்டால் அலையும்

ஏற்படாதோ ஜலமென்பது உண்மையானதோ இவ்விதம் பிராதிபாஸிகமும் வியாவஹாரிகமில்லாவிட்டாலில்லை. வியாவஹாரிகமும் பரமார்த்த வஸ்துவில்லாவிட்டால் இல்லை. ஆகையால் உண்மையில் கடாகாசமும் மஹாகாசம் தான், இந்தப்பிரகாரம் பாராமார்த்திகனான கூடஸ்தனும் பரமாத்ம ஸ்வரூபம்தான் என்பதே சித்தாந்தம். இவ்விதம் இதல்ல இதல்லவென்கிற சுருதிவாக்கியங்களால் சரீரம் முதலான பஞ்சகோசங்களிலிருந்தும் பாமார்த்தமாயுள்ள கூடஸ்தனை விலக்கி அவனை நான் என்று வழங்கப்படும் அஹம்பதார்த்த மென்று அறிந்துகொண்டு அந்த நான் பிரம்மமாகிறேன் என்று சுருதி யுக்தி விசாரங்களால் பிரத்யக்ஷமாகச்செய்து கொள்கிறான். இவன் தான் பரிபூர்ண பிருப்மஸ்வரூபன் இவனையே புண்யபாபங்கள் ஒன்றும் தொடுகிறதில்லையென்று ஸகலமான உபநிடதங்களும் ஒரே அபிப்பிராயத்துடன் போதிக்கின்றன. சுபம்.

உபபத்திராதிபர்.

மூன்றாவது வர்ணகம் முற்றிற்று.

---

## ஐப்பிசி-ஸ்ரீ அமாதிதி சிராத்தம்.

சென்ற ஐப்பிசி-ஸ்ரீ அமாதிதியில் செய்யவேண்டிய மாதா பித்திராதிகளுடைய பிரத்தியாப்திக சிராத்தத்தை வாக்கிய பஞ்சாங்கத்தையனுஸரித்தவர்கள் என்றையதினம் செய்யவேண்டியது என்று ஸந்தேஹப்பட்டுக் கேட்டவர்களுக்காக ஆர்யதர்மம் 40-வது ஸஞ்சிகையில் ‘கிரஹணமோசனமானபிறகு ஸூர்யாஸ்தமயத்திற்குள் சில விநாடிகள் பாக்கியிருப்பதால் அன்று மோசனத்திற்குப்பிறகு ஸ்நானம் செய்து, சிராத்தத்தையாரம்பித்துவிட்டு, ஸந்தியாவந்தனம் செய்து, பாக்கி சிராத்தகாரியத்தை நடத்தவேணும்’ என்று எழுதப்பட்டிருக்கிறது. ‘அப்படிச் சிராத்தத்தை ஸாயங்காலம் ஆரம்பிக்கவும், இரவில் ஸமாப்தி செய்யவும் பிரமாணவசனங்கள் எங்கே இருக்கின்றன? அதை விபரமாய் அடுத்த பத்திரிகையில் எதிர்பார்க்கிறேன்’’ என்று தென்காசிதாலூகா ஆபிகுடி K. Y. சுப்பிரமணியகனபாடிகள்

லெட்டர்மூலமாய்க் கேட்டிருக்கிருர். அவருக்கு பதில் கூறு வோம். வைத்தியனுததீக்ஷிதீயம் சிராத்தகாண்டத்தில் "பார்வண சிராத்தகாலநிர்ணயம்" என்ற பிரகாணத்தில் (கும்பகோணம் சாரதா விலாஸ பிரஸ்ஸில் 1924-ஆுத்தில் அச்சிட்ட புத்தகத்தில் 279-வது பக்கம்முதல் நான்கு பக்கங்களில் இந்தச் சங்கை செய்துகொண்டு விரிவாக ஸமாதானம் கூறப்பட்டிருக்கின்றது. அதன் சுருக்கமாவது:— ஸாயங்காலத்திலும் ஏதேனுமிடையூர் நேர்ந்துவிட்டால் அன்று சிராத்தத்திற்குலோபந்தானு? அல்லது இரவிலும் செய்யலாமா?" என்று ஸம்சயப்பட்டு, "அன்று லோபந்தான்; ஸாயங்காலமானது முக்கியகாலமாகவும், கௌண காலமாகவும் ஆகாதென்று நிஷேதிக்கப்பட்டதால், அதற்கு முக்யகாலத்துவத்தை மனு நிஷேதித்திருக்கிருர். கௌணகாலத் துவமும் வியாஸ வியாக்ரபாதர்களால் விலக்கப்பட்டது. ஆகை யால் பகலில் சிராத்தம் செய்ய ஸம்பவிக்காதபக்ஷத்தில் அன்று லோபந்தான்" என்று பூர்வபக்ஷம் பிராப்தமாகவே, ஸித்தாந்தம் கூறுகின்ருேம் என்று தொடங்கி, "இரவில் சிராத்தத்தை எவ் விதத்திலும் செய்யக்கூடாதென்று நிஷேதம் சொல்லமுடியாது. ஆபஸ்தம்பர் இரவில் சிராத்தஸமாப்தியையங்கீகரித்திருக்கின்ற படியால், 'ஸந்தியாஸமீபத்தில் ஆரம்பித்த சிராத்தத்திற்கல்லவா இரவில் ஸமாப்தி (முடிவு) நேரும். அப்படி ஸந்தியாஸமீபத்தில் சிராத்தாரம்பத்தை ஸ்கந்தர் நிஷேதித்திருக்கிருரே' என்று சங்கைசெய்துகொண்டு, அது ஸரியல்ல. ஸந்தியாஸமீபத்தை நிஷேதித்திருப்பது இது முக்கியகாலமில்லையென்ற அபிப்பிராயத் தாலாம். இது கௌணகாலமாகுமென்பது ஆபஸ்தம்பவசனத் தால் ஸித்திக்கின்றது. அதனுல் அதில் ஆரம்பிக்கப்பட்டதற்கு இரவில் ஸமாப்தி ஸம்பவிக்கலாம். இங்ஙனமாயினும் இரவில் ஸமாப்தியைத்தானே செய்யலாம்; சிராத்தத்தை ஆரம்பிக்கக் கூடாதேயென்ருல், அப்படியும் சொல்லமுடியாது. ஸமாப்தி செய்யலாமென்பதை உபலக்ஷணமாகக்கொண்டு இரவிலும் ஆரம்பம் செய்து இரவிலேயே ஒரு யாமத்திற்குள் ஸமாப்தி செய்யலாம். இப்படியாவது கஷ்டப்படுவானேயென்ருல் சிராத்த தினத்தில் சிராத்தத்தைச் செய்யாமல் விடுவது வெகு தோஷத் திற்குக் காரணமாய்விடும். அதனுல் சிராத்ததினத்தில் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் சிராத்தத்தைச் செய்யாமல் நிருத்தக்கூடாது.

இதற்கு ஆதாரமாக ஜாபாலி, தேவலர், மனு முதலிய அனேக ஸ்மிருதிவசனங்கள் பிரமாணமாகக் கூறப்பட்டிருக்கின்றன. ஆகவே இரவிலேயே சிராத்தத்தையாரம்பித்து ஸமாப்திசெய்யலா மென்றால் ஸந்தியாஸமீபமாயினும் பகலில் ஆரம்பிப்பதற்கு என்ன தடை" என்று ஸித்தாந்தம் கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் இந்த விஷயம் வைத்தியநாததீக்ஷிதீயத்தைப் பார்த்திருப் பவர்களுக்கு பிஷ்டபேஷணம்மாதிரி தோன்றலாம். ஆயினும் கேட்டவருக்குப் பதிலெழுதவேண்டுமென்ற நோக்கத்தால்மட் டும் இது எழுதப்பட்டதென்றறிக.

V. S. வேங்கட்டராமசாஸ்திரி

---

# ஓர் ஸந்தேஹம்.

---

தசராத்திரஞாதிகளுக்கு ஞாதிமரணாசௌசப்பிரயுக்தமான க்ஷௌரம் 10-வது தினத்தில் விதிக்கப்பட்டிருக்கின்றது. அந்த 10-வது தினம் வெள்ளிக்கிழமையாயிருந்தால் அன்று க்ஷௌரம் செய்துகொள்ளக்கூடாது. 9-வது தினத்திலேயே செய்து கொள்ளவேண்டும். வெள்ளிக்கிழமையன்று செய்துகொண்டால் அவனுடைய குலம் நாசமடைந்துவிடும் என்றும் கூறப்பட்டிருக் கின்றது. அந்த ஞாதிமரணாசௌசம் 10-வது தினத்திற்குமுந் தியே தெரிந்திருந்தால் அன்று வெள்ளிக்கிழமையாயில்லாவிடில் அன்றும், வெள்ளிக்கிழமையாகில் 9-வது தினத்திலும் க்ஷௌரம் செய்துகொள்ளவேண்டுமென்று முன்னமேயே தெரிந்துகொண்டு அப்படியே அனுஷ்டிக்கலாம். வெள்ளிக்கிழமையாயிருக்கிற தசமதினத்தன்றே ஞாதிமரணத்தைக் கேள்வியுற்ற ஓர் ஞாதி அந்த வெள்ளிக்கிழமையன்றே வபனம் செய்துகொள்ளவேண் டுமா? அல்லது மறுநாள்தான் செய்துகொள்ளவேண்டுமா? இவ் விஷயத்தைக்குறித்து யாதொரு முடிவும் சொல்லமுடியாமலிருப் பதால் பண்டிதர்கள் ஆராய்ந்தறிந்து காரணங்களுடன் பதிலை ஆர்யதர்மம்மூலமாகவே வெளியிட முன்வருவார்களென்று எதிர் பார்க்கிறேன்.

S. V. நாகேச்வரன்,
சிவகாமிபுரம்.

---

# ஸந்தேஹத்திற்கு பதில்.

வெள்ளிக்கிழமையாயிருக்கிற தசமதினத்தன்றுதான் ஞாதிமரணத்தை ஒருவன் கேட்பானேயாகில் அவன் அன்றைக்கே க்ஷௌரம் செய்துகொள்ளவேண்டியதுதான். இந்தமாதிரி ஸம்பவத்தில் சுக்கிரவாரநிஷேதம் பிரவிர்த்திக்காது. 10-வது தினத்திற்கு முந்தியே கேள்விப்பட்டவன் விஷயத்திற்றான் ஸாவகாசமாயிருப்பதால் பிரவர்த்திக்கும். 10-வது தினத்தன்றே கேள்விப்பட்டால் நிரவகாசமாயிருப்பதுபற்றி அங்கு இந்த நிஷேதம் பிரவிர்த்திக்காது. 9-வதுநாள் செய்துகொள்ளவேண்டுமென்றதுபோல் 10-வது தினத்திலேயே கேள்விப்பட்டால் 11-வது நாளில் செய்துகொள்ளலாமென்று விதிக்காதபடியாலும், ஆசௌசத்தை விருத்திசெய்வது கூடாதாகையாலும், வெள்ளிக்கிழமையாயிருக்கிற 10-வது நாளில் க்ஷௌரம் செய்துகொள்ளாமல், 11-வது தினத்தில் செய்துகொண்டால் அன்றைக்குத்தான் தர்ப்பணம் செய்யவேண்டியதுபற்றி ஒருநாள் அதிக ஆசௌசம் கொள்ளவேண்டியதாகவே நேருமாதலாலும் சுக்கிரவாரத்தன்று கேள்விபட்டவன் அன்றைக்கே க்ஷௌரதர்ப்பணங்களைச் செய்யவேண்டியது. 10-வது தினத்தில் தர்ப்பணத்தைச் செய்துவிட்டு 11-வது தினத்தில் க்ஷௌரம் செய்துகொண்டு அன்றைக்கே ஆசௌச நிவிர்த்தி செய்யலாமேயென்பது கூடாது. க்ஷௌரம் செய்துகொள்ளாமல் தர்ப்பணம் செய்யக்கூடாது. 11-வது தினத்தில் தர்ப்பணத்தைச் செய்தாலும் அன்றைக்கே தீட்டைக் கழித்துவிடலாமேயென்பதும் கூடாது. பிரேதசப்தத்தையுச்சரித்து தர்ப்பணம் செய்தால் அன்று ஆசௌசம் கொள்ளவேண்டியதுதான். ஆகையால் வெள்ளிக்கிழமையாயிருக்கிற 10-வது தினத்தில் ஞாதிமரணத்தைக் கேட்டவனும் அன்றைக்கே க்ஷௌரம் செய்துகொள்ளவேண்டும் என்பது நியாயத்தால் ஏற்படுகின்றது.

V. S. வேங்கட்டராமசாஸ்திரி.

## ஸ்ரீ காசி ப்ராம்மண மஹாஸம்மேளனம்.

(541-வது பக்கத்தொடர்ச்சி.)

ஒவ்வொரு தீர்மானத்தையும் பாடிவிட்டார். பிறகு 2-வது விஷயம் இனி யாவற்றையும் அப்படியே ஸம்ஸ்கிருதத்தில் எழுதுவது முடியாதுபற்றி அதன் கருத்தை அப்படியே எழுதுகிறேன்.

2. இப்போது சட்டஸபைகளில் சாரதா பில் என்பது ஸனாதனதர்ம்மத்தின் உயர்நிலையை அறுக்கிறதாலும் ஸனாதனதர்மிகளின் மனதைப் பிளக்கிறதாலும் இந்த ஸபை அதை வெகு கடுமையாய்க் கண்டிக்கிறது. ஆகையால் மகாராணி விக்டோரியா அவர்களால் எங்களுக்குக் கொடுக்கப்பட்ட அபயவசனப் பிரதானத்தைப் பொருட்டாய் எண்ணி சக்கிரவர்த்தியின் பிரதிநிதியான வைஸ்ராய் அவர்கள் தன் அதிகாரத்தைக்கொண்டு இதைத்தள்ளிவிடவேண்டும். இதற்காக இந்தப் பிராம்மணமஹாஸம்மேளனம் சக்திக்கேற்றவாறு பூரணமாய் முயற்சி எடுத்துக்கொள்ளும். இதற்கு உபாயம் தேடவும் கார்யத்தை நடத்தவும் ஸப்கமிட்டி நியமிக்கப்படவேண்டும் என்ற இந்த விஷயத்தை மகாமகோபாத்யாய பண்டித கிரிதரசர்மாவென்பவர் பிரேரேபனை செய்தார். மகாமகோபாத்யாய பண்டித ஹாரீபால்சாஸ்திரிகளும், மகாமகோபாத்யாய பண்டித தாதசுப்பிராயசாஸ்திரிகளும், பண்டித தேவகீநந்தனதர்சனாலங்காரரும் ஆமோதிக்க ஸபையோர்களால் ஏகமனதுடன் அங்கீகரிக்கப்பட்டு பிறவிக்குருடராலும் அழகாய்ப் பாடப்பெற்று முடிந்தது. உடனே அடியிற்குறிப்பிடப்பட்டவர்கள் ஸப்கமிட்டியில் நியமிக்கப்பட்டனர்.

1. சரச் சந்திர ஸாங்கிய தீர்த்த மகோதயர், பங்கால்.
2. கிரிதர சர்மா, ராஜபுதான்.
3. அனந்தகிருஷ்ணசாஸ்திரிகள், பிரவர்த்தகர்.
4. என். ஜீ. ஸாவரகர், அகோலா, மகாராஷ்டிரா.
5. கணபர்த்தி மார்க்கண்டேயசர்மா, மதிராஸ்.

3. இந்தப்பிராம்மணஸம்மேளனமானது வைஸ்ராய் கௌன்ஸிலிலும் மற்ற கவர்னர் ஸபைகளிலும் பாரதீய வர்ணாச்ரமதர்மங்களுக்கு விரோதமான அதர்மங்களைச் சட்டமாக்க ஒருவரும்

கொண்டுவரக்கூடாது. அவ்விதம் கொண்டுவருவதால் வர்ணாச்ரமிகளுக்கு மிகவும் புண்செய்வதாய் ஆகிறது. அவ்விதம் கொண்டுவருகிறவர்களை அந்த ஸ்தானத்தைக் காலிசெய்யும்படி நாம் நிர்ப்பந்தம் செய்வோம் என்று இந்த விஷயத்தைப் பண்டித ரமாநாத பிச்சர் பிரேரணை செய்தார். பண்டித காசிநாத சாஸ்திரிகளும் பண்டிதவாமனஸாகர வித்யாஸாகரரும் ஆமோதிக்க ஏகமனதாய் ஸபையோர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4. இந்த மகாஸபையானது அந்தந்த தேசத்தினுடையவர்களுக்கும் ஸர்வதேசங்களுக்கும் ஸந்தேகம்உண்டாக்கக்கூடியவைகளும் சிக்கலாயுமான விஷயங்களின் நிர்ணயத்திற்காக ஒவ்வொரு பெரிய இடத்திலும் பத்துப்பண்டிதர்கள் சேர்ந்த ஸபை நியமிக்க வேண்டியது அத்யாவசியகம் என்று எண்ணுகிறது. அவ்விதம் செய்யும்படி அந்தந்த தேசத்தியவர்களின் முன்னிலையில் இப்போது பிரார்த்திக்கிறது. அவ்வச் சபை மூலம் பெரிய விஷயங்கள் இச்சபைக்கு வரவேண்டுமென்ற விஷயத்தைப்பற்றி விஸ்தாரமாய்ப் பண்டித கங்காவிஷ்ணுசர்மா பேசிப்பிரேரணை செய்தார். 1. பண்டித லாலுராமசாஸ்திரிகள், 2. ப. பகீரத கோஸ்வாமிகள்; 3. ப. ககேந்திரநாத சாஸ்திரிகள், 4. ப. மாதவராவகுஷீண சர்மா, 5. ப. ராமபவனோபாத்தியாயர் முதலியவர்கள் இவ்விதம் ஸபை அத்யாவசியகம்என்பதை நன்கு குறிப்பிட்டு அனுவதிக்க ஸபையோர்களால் ஏகமனதுடன் அங்கீகரிக்கப்பெற்று நிறைவேறியது.

5. சமீபத்தில் பிரசுரிக்கப்பட்டஸனாதன தர்மப்ரதீபம் என்கிற கிரந்தத்தை மறுபடி ஸமாலோசனை செய்து மறுபடி தீர்மானமாய் அச்சிடும்பொருட்டு கீட்குறிக்கப்பெற்ற பண்டிதர்களைக் கொண்ட ஓர் உபஸமிதி ஏற்படுத்தவேண்டும். அச்சபையார் ஒரு வருடத்திற்குள் அவ்விஷயத்தின் நிர்ணயத்தைப் புத்தகரூபமாய் வெளியிடத் தயாரித்துத் தரவேண்டும் என்ற இவ்விஷயத்தை சோட்டுமகாராஜா அவர்கள் ப்ரேரணை செய்தார். அதை 1. பண்டித நந்தகிசோரவாணீபூஷணர், 2. ப. ஸ்ரீஜீவந்யாய தீர்த்தர், 3. ப. தேவகிருஷ்ண தீர்த்தர், 4. தேதியூர் சுப்பிரமணிய சாஸ்திரிகளும் ஆமோதித்தனர். உபஸமிதி அல்லது கிளைச்சபைக்கு அடியிற்கண்டவர்கள் மெம்பர்களாய் நியமிக்கப்பட்டனர்.

1. மகாமகோபாத்தியாய பண்டித லக்ஷ்மண சாஸ்திரி, த்ராவிடர், 2 ஷி கிரிதரசர்மா, 3 பட்டிராங்காசார்யர் 4 அகிலாநந்த

சர்மா 5 மாதவராவ்தாணி M.A. 6 ஷடி விருபாக்ஷ சாஸ்திரிகள் 7 நாகேச சாஸ்திரிகள் 8 ராஜேசுவர சாஸ்திரிகள் ந்யாயாசாரியர் 9 தேவகிருஷ்ணசாஸ்திரிகள் 10 ராமபவனோபாத்தியாயர் 11 ஷடி ரகுநாதராய் மகோதயர் 12 ஹரிஹரக்ருபாலு சர்மா 13 கிருஷ்ண மாசார்யசாஸ்திரிகள் 14 பட்டஸ்ரீராமனுதசாஸ்திரிகள் 15 ஸ்ரீரமாபதிமிச்ரர் 16 ஹாதிபாய் சாஸ்திரிகள் 17 துர்க்காசர்ண சாங்கிய வேதாந்த தீர்த்தர் 18 தேவகிநந்தனதர்சனாலங்காரர் 19 ராதா கிருஷ்ணடண்டாமிச்ரர்.

அவ்வவ்வூர் ஸனாதன தர்மஸபையின் முக்கியப்ரதிநிதிஆசார்ய மடங்களின் இரண்டு பண்டிதர்கள்.

6. இம்மஹாஸம்மேளனமானது ஸம்ஸ்கிருத விச்வவித்யாலயம் ஒன்றை ஸ்தாபிப்பது அத்தியாவச்யகம் என்று எண்ணுகிறது. அதற்குப் பொருள் சேகரிக்க கீட்குறிக்கப்பட்ட பெரியோர்கள் எண்ணப்படுகின்றனர்.

1. எல்லாமடாதிபதிகள், 2. மகாராஜாதிராஜதர்ப்பங்காமகாராஜா 3. மகாமகோபாத்தியாய பண்டித லக்ஷ்மணசாஸ்திரி, த்ராவிடர், 4.வரமாசரணபட்டாசார்யர், 5 கிரிதரசாஸ்திரிகள், 6.அனந்த கிருஷ்ணசாஸ்திரிகள், 7. கல்கத்தா பஞ்சாயத்து சபை, 8. ராஜா சசிசேகாராய் மகோதயர், 9. ஸ்ரீஸாதுராமமுக்தாராமகோயின்கா, 10. ஸ்ரீவ்ரஜேந்த்ரகிசோராராய்சௌத்ரீ, 11. ஸாஓம்காரமலஜரீயா, 12. ராஜாயோதீசந்திரமகோதயர்.

இனி ப்ரஸ்தாபங்கள் யாவும் ஸபாபதியின் கட்டளையினல் பண்டித மகாமகோபாத்தியாய அனந்தகிருஷ்ண சாஸ்திரிகளாலேயே உபன்யஸிக்கப்பெற்று ஸபையோர்களால் ஏகமனதுடன் அங்கீகரிக்கப்பெற்று நிறைவேறின.

7. இனி கவர்னர் கௌன்ஸில் ஸபைக்கு ஒட் விரும்பிவருபவர்களில் எவர்கள் ஸனாதன தர்மத்தில் அபிமானமுள்ளவர்களோ எவர்கள் அச்சபையில் ஸனாதன தர்மத்திற்கு விரோதமான விஷயத்தைக் கொண்டுவரமாட்டார்களோ கொண்டுவருபவர்களை எதிர்ப்பார்களோ அத்தகையோருக்கே நாம் ஒட் கொடுக்கவேண்டுமென்று தீர்மானம் செய்துகொண்டு அதற்குத் தக்கமுயற்சியை அப்போதப்போது செய்யவேண்டுமென்று இச்

சபை கட்டளையிடுகிறது என்று சொன்னதும் எல்லோராலும் அப்படியே என்று கோடி இடி சேர்ந்தன போல் சப்தத்துடன் அங்கீகரித்தது.

8. கௌன்ஸில் ஸ்தானங்களில் மடாதிபதிகளுக்குவிசேஷாதிகாரமும் பாடசாலைகளில் கற்றுப்பட்டம் பெற்ற ஸமஸ்த பண்டிதர்களுக்கும் தர்மவிஷயத்தில் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும்படிகூடியசீக்கிரத்தில் அதிகாரம் கொடுக்கவேண்டுமென்று இச்சபை ராஜாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறது. இவ்விஷயமும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

9. அகிலபாரதவர்ஷீயப்ராம்மண மகாஸம்மேளன கார்ய நிர்வாக ஸபை ஒன்று எப்போதும் காசியில் இருக்கவேண்டும். இதற்குஅந்தந்த தேசத்தில்ஏற்படும் ஸபாபண்டிதர்கள் ஒரு குறிப்பிட்ட தொகையுள்ளவர்களாய் அந்தந்த தேசஸபாபதிகளால் பெயர் குறிப்பிடப்படவேண்டும். இக்காசிமகாஸபைக்குஸபாபதி தர்பபங்காமகாராஜாஅவர்கள். மெம்பர்கள், பஞ்சாநநதர்க்கமகோதயர், கிரிதாசாஸ்திரிமகோதயர், ஹாதீபாய்சாஸ்திரிகள்,பத்மநாப சாஸ்திரிகள், கேசவராவ், கோபால லாலின், அபயங்கா வாஸுதேவ சாஸ்திரிகள், விருபாக்ஷ சாஸ்திரிகள், ஹரிஹாகிருபாலு மகோதயர், ஹரிஹரநாராயண சாஸ்திரிகள்,சசிநாத்ஜா லக்ஷ்மண சாஸ்திரி திராவிடர், அனந்தகிருஷ்ண சாஸ்திரிகள் இவ்வளவு பெயர்கள் மகாமகோபாத்தியாயர்கள். அகிலாநந்த சர்மா, ராம பவனுபாத்தியாயர், தேவதத்தமிச்ரர், தேவகீநந்தன தர்சனலங்காரர், கிருஷ்ணசாஸ்திரிகள், நந்தகிசோர சாஸ்திரிகள், பல்லாரி, ராமகிருஷ்ண சாஸ்திரிகள், மகாக்னிசித் தாராசரணபட்டாசார்யர், ராஜேச்வர சாஸ்திரிகள், சரச்சந்திரஸாங்கிய தீர்த்தர், மாதவ ராமச்சந்திரதாணி, M. A., ரங்காசார்யர், பாலகிருஷ்ணசார்ய ரட்டி சாஸ்திரிகள்.

10. பாரதவருஷத்திலுள்ள ஸமஸ்தபிராம்மணர்களும்முன் கூறியபடி கிராமந்தோறும் ஸபையைக்கூட்ட ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்குமுன் ஸபை ஏற்பட்டிருந்தால் அதை இதின் கிளைச்சபையாய்ச் சேர்க்கவேண்டும்.

11. அந்தந்த தேசத்திலுள்ள அவாந்தர ஜாதிகள் தாங்கள் மேலென்றாவது தாங்கள் மேல்ஜாதியை அடையவேண்டுமென்றாவது எண்ணங்கொண்டு ஸபைகளிலோ தனியாகவோ

கலக்கம் செய்வது இச்சபைக்கும் நமது மேன்மைக்கும் தகுதியற்றது என்று இச்சபை அபிப்பிராயப்படுகிறது.

12. வடதேசத்தில் ஸ்ரீமத்பகவத்பாதாசார்யர்களால் ஸ்தாபிக்கப்பெற்ற ஜ்யோதிர்மடம் பிரகாசமற்றிருப்பதால் மறுபடியும் அதை மேன்மைக்குக் கொண்டுவரவேண்டுமென்று இந்த ஸபை வெளியிடுகிறது.

13. மூன்று லோகங்களையும் பரிசுத்தம் செய்ய ஸ்வதந்திரமாய்ப் பூலோகத்தில் பிரவகிக்கிற கங்கையின் பிரவாகத்தை ஓரிடத்திலும் அணைபோட்டு தடங்கல் செய்யக்கூடாது. மற்று பட்டணத்தின் மலஜலங்களை கங்கையில் கடத்துவதும் கூடாது. அப்படிச் செய்வதால் தர்மநிஷ்டர்களான எங்களுக்கு மிகவும் தொந்திரவைக் கொடுப்பதாய் ஆகும். தர்மத்திற்கும் வரவாவாடுதல் ஏற்படுகிறது என்று இந்த ஸபை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறது. (தொடரும்,)

M. N. சுப்பிரமணியசாஸ்திரியள்.

---

## சிதம்பரம் அத்வைதஸபை.

(16-வது வருஷம்.)

ஸ்ரீ நடராஜமூர்த்தியின் மஹோத்ஸவாரம்பதினமாகிய நிகழும் விபவ-ஞு மார்கழி-மீ 4உ.க்கு (18—12—28)-முதல் ஆரம்பம் செய்து நடைபெறும் அத்வைதஸபையில் காலை 8-மணி முதல் 9½-மணிவரையில் உபநிஷத்பாராயணமும், மாலை 3-மணி முதல் 5-மணிவரையில் கிரமப்ராப்தமான ஸூத்ரபாஷ்யம் 16-பாதங்களிலும் உபந்யாஸங்கள் ஸம்ஸ்கிருதபாஷையிலும், தமிழ் பாஷையிலும், (26—12—28)வரை நடபெறும். ஆகையால் அத்வைதத்திலும், ஸம்ஸ்கிருதபாஷையிலும், அபிமானமுள்ள ஆஸ்திகசிகாமணிகள் வந்திருந்து மேற்படி ஸபையை நடத்தி வைத்து (27—12—28-ல்) நடைபெறும் ஆருத்திராதரிசன மஹோத்ஸவத்தையும் தெரிசித்துப் பேராநந்தம் அடையும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படிக்கு,

ஷை ஸபை காரியதரிசி

மகாமகோபாத்தியாயர், சிவ. தண்டபாணிஸ்வாமிதீக்ஷிதர்.